**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம்—சேலம்**

**முன்னிலை: திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்**

**மாவட்ட நீதிபதி**

**2026—ஆம் ஆண்டு ஜூன்திங்கள் 30—ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆனித் திங்கள் 16—ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.129/2017**

**CNR No. TNSA01-000923-2017**

**சிந்தாமணி** **...வாதி.**

**—எதிர்—**

**01. கந்தாயம்மாள் (இறந்தார்)**
**02. சேகர்**
**03. துரை**
**04. பேபி (எ) கலைவாணி** **...பிரதிவாதிகள்.**
**(Amended as per order in IA 647/17 dt. 06.11.2017)**

இந்த வழக்கில் வாதிக்காக வழக்குரைஞர் **திரு A.குணசேகரன்** அவர்களும் 02-ஆம் பிரதிவாதிக்காக வழக்குரைஞர் **திரு T.முத்துகிருஷ்ணன்** அவர்களும் தோன்றினர். 0-1 ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார். 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினராக உள்ளனர். இந்த வழக்கு இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி, 02-ஆம் பிரதிவாதி தரப்பில் முன்வைத்த வாதங்களை கேட்டும் வாதுரைகளை ஓர்வுசெய்தும் சான்றுகளை ஆய்ந்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த வழக்கில் இன்று இந் நீதிமன்றம் தீர்ப்புரை பகர்கிறது.

## தீர்ப்புரை

### முகவுரை

வழக்குச் சொத்தில் 5/16 பங்கிற்கு பாகப்பிரிவினை கோரியும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் பிரதிவாதிக்கு எதிராக உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 07-ஆம் வகுமுறையின் 01-ஆம் விதியின்கீழ் வாதி இந்த வழக்கைத் தொடுத்துள்ளார்.

## வழக்குரையின் சுருக்கம்

01. 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாள்(**வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டார்**) வாதி சிந்தாமணியின் தாயார். கந்தாயம்மாளின் கணவர் காலஞ்சென்ற முத்துக்கவுண்டர். முத்துக்கவுண்டருக்கும் கந்தாயம்மாளுக்கும் 03-ஆம் பிரதிவாதி துரை மற்றும் 04-ஆம் பிரதிவாதி பேபி (எ) கலைவாணி ஆகிய இருவரின் தாயார் மணி, 02-ஆம் பிரதிவாதி சேகர், வாதி சிந்தாமணி ஆகிய மூவரும் மகள்களும் மகனும் ஆவர்.

02. முத்துக் கவுண்டருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் 1989 ஆம் ஆண்டு நடந்தப் பாகப்பிரிவினையில் முத்துக்கவுண்டருக்கு ஒதுங்கிய சொத்துக்களும் முத்துக்கவுண்டர் 1998-ஆம் ஆண்டு கிரயம் வாங்கிய சொத்துக்களும் வழக்குச் சொத்துக்கள் ஆகும். வழக்குச் சொத்துக்களை அனுபோகம்செய்துவந்த முத்துக்கவுண்டர் அவைகள் சம்மந்தமாக ஏற்பாடு எதுவும் செய்யாமல் 12.11.2014-ஆம் தேதியன்று இறந்துவிட்டார்.

03. முத்துக்கவுண்டருக்குமுன்பே 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளின் தாயார் மணி இறந்துவிட்டார். முத்துக் கவுண்டருக்கு அவரது மனைவி கந்தாயம்மாள், மூத்த மகள் மணியின் பிள்ளைகளான 03-ஆம் பிரதிவாதி துரை, 04-ஆம் பிரதிவாதி பேபி (எ) கலைவாணி, மகன் 02-ஆம் பிரதிவாதி சேகர், இளைய மகள் வாதி சிந்தாமணி ஆகியோர் மட்டுமே முதல் வகுப்பு வாரிசுகள். முத்துக்கவுண்டர் இறந்தபின் மேற்சொன்ன அவருடைய முதல் வகுப்பு வாரிசுகள் அனைவரும் வழக்குச் சொத்துக்களை வாரிசுரிமையில் அடைந்துக் கூட்டாக அனுபோகம் செய்துவந்தனர்.

**04.** வழக்குச் சொத்துக்களில் வாதிக்கு 5/16 பங்கும் 02-ஆம் பிரதிவாதிக்கு 5/16 பங்கும் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளுக்கு கூட்டாக 5/16 பங்கும் 01-ஆம் பிரதிவாதிக்கு 1/16 பங்கும் வாரிசுரிமைப்படி உரிமை யானது. பிரதிவாதிகளுடன் வழக்குச் சொத்துக்களை கூட்டாக அனுபோகம் செய்வதில் வாதிக்கு வசதிகுறைவு ஏற்பட்டது. வாதி 01-ஆம் பிரதிவாதியை சந்தித்து வழக்குக் சொத்துக்களில் தனக்கு உரிய பாகத்தைப் பிரித்துக் கொடுக்குமாறு கோரினார். 02-ஆம் பிரதிவாதியுடன் கலந்து ஆலோசித்துப் பாகம் பிரித்துக் கொடுப்பதாக சொன்ன 01-ஆம் பிரதிவாதி 02-ஆம் பிரதிவாதியுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு வழக்குச் சொத்துக்களில் வாதிக்கு பாகம் பிரித்துக் கொடுக்காமல் காலந் தாழ்த்திவந்தார்.

**05.** வாதி 10.02.2017-ஆம் தேதியன்று உள்ளூர் பெரியவர்களை அழைத்துக்கொண்டு 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளை சந்தித்து வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடுக்குமாறு கேட்டதற்கு பாகம் எதுவும் பிரித்துக் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டனர். அதனால், வாதி வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை பிரித்துக் கொடுக்கக் கோரி தன்னுடைய வழக்குரைஞர் மூலம் 27.02.2017-ஆம் தேதியன்று 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினார்.

**06.** வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு 08.03.2017-ஆம் தேதியன்று 01 ஆம், 02-ஆம் பிரதிவாதிகள் அனுப்பிய பதிலறிவிப்பில் வாதி சிந்தாமணி முத்துக்கவுண்டருக்கும் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளுக்கும் பிறந்த உயிரணு மகளில்லை என்றும் 02-ஆம் பிரதிவாதி சேகரும் 03 ஆம், 04-ஆம் பிரதிவாதிகளின் தாயார் மணியும் மட்டுமே உயிரணு மகனும் மகளும்

என்றும் அதனால் வழக்குச் சொத்துக்களில் வாதிக்கு பாகவுரிமை எதுவும் இல்லை என்றும் பொய்யுரைத்திருந்தனர். வாதிக்கு வழக்குச் சொத்துக்களில் பாகம் கொடுக்கக்கூடாது என்று வஞ்சகமாக அவ்வாறு பொய்யுரைத்தனர்.

07. வழக்குச் சொத்துக்களில் வாதிக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் 03-ஆம் பிரதிவாதி 02-ஆம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தைப் பொறுத்து கிரயம் கொடுத்ததுபோல் 10.03.2017 ஆம் தேதியன்று பெயரளவில் கிரயப் பத்திம் ஒன்று எழுதிக் கொடுத்துள்ளார். அந்தக் கிரயப் பத்திரம் வழக்குச் சொத்துக்களில் வாதிக்குரிய பாகவுரிமையை பாதிக்காது.

08. வழக்குச் சொத்துக்களில் வாதிக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடுக்க மறுத்து வாதியை ஏமாற்ற வேண்டும் என்று பிரதிவாதிகள் வஞ்சகமாக செயல்படுவதால் வழக்குச் சொத்துக்களில் வாதிக்குரிய 5/16 பாகத்திற்கு பாகப்பிரிவினை கோரியும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதி இந்த வழக்கைத் தாக்கல்செய்துள்ளார்.

09. இந்த வழக்கு நிலுவையில் இருந்துவந்தபோது 28.09.2017 ஆம் தேதியன்று கந்தாயம்மாள் விருப்பாவணம் எதுவும் எழுதாமல் இறந்து-விட்டார். அவரது மகளான வாதியும் மகனான 02-ஆம் பிரதிவாதியும் முன்னதாக இறந்துபோன மகள் மணியின் பிள்ளைகளான 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளும் ஏற்கனவே வழக்கில் தரப்பினராக உள்ளனர்.

## எதிர்வழக்குரையின் சுருக்கம்

**03–ஆம், 04–ஆம் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல்செய்யாமல் தோன்றாத் தரப்பினராகிவிட்டனர். எதிர்வழக்குரை தாக்கல்செய்வதற்குமுன் 01–ஆம் பிரதிவாதி**

**28.09.2017–ஆம் தேதியன்று இறந்துவிட்டார். 02–ஆம் பிரதிவாதி 24.01.2018–ஆம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல்செய்துள்ளார்.**

**10.** காலஞ்சென்ற முத்துக் கவுண்டருக்கும் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளுக்கும் பிறந்த உயிரணு பிள்ளைகள் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளின் தாயார் மணியும் மகன் 02-ஆம் பிரதிவாதி சேகரும் மட்டுமே. மணி 17 ஆண்டுகளுக்குமுன் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளை மட்டும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். வாதி சிந்தாமணி முத்துக் கவுண்டருக்கும் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளுக்கும் பிறக்க -வில்லை. வாதி சிந்தாமணி 02-ஆம் பிரதிவாதி சேகரின் உடன்பிறந்த சகோதரி இல்லை.

**11.** 02-ஆம் பிரதிவாதி சேகரின் தகப்பனாரான முத்துக் கவுண்டர் ஆதரவற்றவராக இருந்த வாதியை தனது குடும்பத்திற்கு அழைத்துவந்து வளர்த்து திருமணம் செய்துகொடுத்தார்.அதைத் தவிர வாதி சிந்தாமணிக்கும் காலஞ்சென்ற முத்துக்கவுண்டருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வேறெந்த ஒட்டும் இல்லை உறவும் இல்லை.

**12.** காலஞ்சென்ற முத்துக்கவுண்டருக்கு அவரது மனைவியான 01 ஆம் பிரதிவாதி கந்தாயம்மாள், மகனான 02-ஆம் பிரதிவாதி சேகர், முன்னதாக இறந்துவிட்ட மகளின் பிள்ளைகளான 03-ஆம் பிரதிவாதி துரை 04-ஆம் பிரதிவாதி பேபி (எ) கலைவாணி ஆகியோர் மட்டுமே முதல் வகுப்பு வாரிசுகள். வழக்குச் சொத்தில் 01-ஆம் பிரதிவாதிக்கு உரிமையான பங்கை அவர் 02-ஆம் பிரதிவாதிக்கு கொடை கொடுத்து அறுதியாவணம் நிறைவேற்றியுள்ளார். வழக்குச் சொத்தில் 03-ஆம் பிரதிவாதிக்கு இருந்த

உரிமையை அவர் 02-ஆம் பிரதிவாதிக்கு விற்று விற்பனை பத்திரம் நிறைவேற்றிக் கொடுத்துள்ளார்.

13. சட்டவிரோதமாக ஆதாயம் அடைய வாதி பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கைத் தொடுத்துள்ளார். வழக்குச் சொத்தில் பாகப்பிரிவினை கோர வாதிக்கு உரிமையில்லை. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. பிரதிவாதிகளை அலைக்கழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வாதி இந்த வழக்கைத் தொடுத்துள்ளார். ஆகையால், இந்த வழக்கை 02-ஆம் பிரதிவாதிக்கு எச்சரிக்கை இழப்பீடு செலவுத்தொகை வழங்கி தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

IIIrd ADJ Court, Salem

### வழக்கெழு வினாக்கள்

**14. வாதுரைகள் அவற்றுடன் தாக்கல்செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகியன ஓர்வு செய்யப்பட்டு இவ்வழக்கில் தீர்வுகாணப்பட வேண்டிய பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டன.**

*01) வழக்குச் சொத்தில் 5/16 பங்கிற்கு பாகப்பிரிவினை கோர வாதி உரிமையுடையவரா?*

*02) வாதி காலஞ்சென்ற முத்துக் கவுண்டருக்கும் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளுக்கும் பிறந்த உயிரணு மகளா?*

*03) இந்த வழக்கில் வாதிக்கு வேறேதேனும் நிவாரணம் வழங்க முடியுமா?*

### சான்றுகள்

15. வாதி தரப்பில் 02 சான்றாளர்களின் சாட்சியம் பதிவுசெய்யப் பட்டுள்ளது; 05 சான்றாவணங்கள் குறியீடுச் செய்யப்பட்டுள்ளன.

பிரதிவாதிகள் தரப்பில் 01 சான்றாளரின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டுள்ளது; 05 சான்றாவணங்கள் குறியீடுச் செய்யப்பட்டுள்ளன.

## 02–ஆம் விவாதக்கூறுமீதான விவாதமும் தீர்முடிவும்

16. வழக்குச் சொத்துக்கள் காலஞ்சென்ற முத்துக் கவுண்டருக்கு பாகப் பிரிவினை மூலமும் கிரயம் மூலமும் சொந்தமானது என்ற சங்கதியை இரு தரப்பினரும் வாதுரை மூலம் ஒப்புக்கொண்டுள்ளனர். முத்துக் கவுண்டரின் முதல்வகுப்பு வாரிசுகளுள் ஒருவர் என்ற உரிமையில் இந்த வழக்கைத் தொடுத்திருப்பதாக வாதி சிந்தாமணி கூறுகிறார்.

17. முத்துக் கவுண்டருக்கும் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளுக்கும் வாதி பிறக்கவில்லை என்றும் ஆதரவற்றவராக இருந்த வாதி சிந்தாமணியை முத்துக் கவுண்டர் தன் குடும்பத்திற்கு அழைத்துவந்து வளர்த்து திருமணம் செய்துகொடுத்தார் என்றும் 02-ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் திட்ட-வட்டமாக மறுத்துள்ளார். வாதி சிந்தாமணி முத்துக்கவுண்டருக்கும் வேறு ஒரு பெண்ணுக்கும் பிறந்தவர் என்று வாதியோ பிரதிவாதியோ வாதுரையில் கூறவில்லை. வாதி சிந்தாமணி முத்துக் கவுண்டருக்கும் உயிரணு மகள் இல்லை; 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளுக்கும் உயிரணு மகள் இல்லை என்பதுதான் 02-ஆம் பிரதிவாதி தரப்பு எதிர்வாதம் ஆகும்.

18. வாதி சிந்தாமணி முத்துக் கவுண்டரின் உயிரணு மகள் இல்லை என்று மறுத்துள்ள நிலையில் முத்துக் கவுண்டரின் சொத்தில் முதல் வகுப்பு வாரிசுகள் என்ற அடிப்படையில் பாகப்பிரிவினை கோரும் வாதியே அவரது கூற்றை நிரூபிக்க வேண்டும்.

19. வாதி சிந்தாமணி வாதி தரப்பு 01-ஆம் சான்றாளாராக நிரூபண ஆணையுறுதி தாக்கல்செய்து சாட்சியமளித்துள்ளார். முத்துக் கவுண்டரும் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளும் தன் உயிரணு பெற்றோர் என்றும் 02-ஆம் பிரதிவாதி சேகரும் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளின் தாயார் மணியும் தன்னுடன் பிறந்த சகோதர சகோதரிகள் என்றும் கூறியுள்ளார். அவர் முதல்விசாரணையில் சொல்லியுள்ள அந்தக் கூற்றை நம்பகமற்ற-தாக்கும் அல்லது பொய்பிக்கும் முரண்பட்டச் சங்கதிகளை குறுக்கு விசாரணையில் அவர் கூறவில்லை.

20. வாதி தரப்பு 02-ஆம் சான்றாளராக வாதி திருமணம்செய்து கொடுக்கப்பட்ட ஊரை சேர்ந்த தங்கவேல் என்பவர் நிரூபண ஆணையுறுதி தாக்கல்செய்து வாதி சிந்தாமணியின் உயிரணு பெற்றோர்தான் காலஞ்சென்ற முத்துக் கவுண்டரும் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளும் என்றும் வாதி சிந்தாமணியின் உடன் பிறந்த சகோதர சகோதரிதான் 02-ஆம் பிரதிவாதி சேகரும் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளின் தாயார் மணியும் என்றும் கூறியுள்ளார். முதல்விசாரணையில் அவர் சொன்ன மேற்சொன்ன சங்கதிகளை நம்பகமற்றதாக்கும் அல்லது பொய்பிக்கும் முரண்பட்ட சங்கதிகள் எதையும் அவர் குறுக்குவிசாரணையில் கூறவில்லை.

21. வாதி தரப்பு 04-ஆம் சான்றாவணமாக சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சாத்தப்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் 25.06.2017-ஆம் நாளிட்டு வழங்கிய வாதியின் பள்ளிச் சான்றிதழ் குறியீடுச் செய்யப்பட்டுள்ளது. அதில் மாணவர் பெயர் மு.சிந்தாமணி என்றும் 1977-ஆம் ஆண்டு சிந்தாமணி 04-ஆம் வகுப்பு படித்ததாகவும்

சிந்தாமணி பிறந்த நாள் 12.06.1966-ஆம் தேதி என்றும் பள்ளியில் சேர்ந்த நாள் 28.07.1972-ஆம் தேதி என்றும் சேர்க்கை எண் 1128 என்றும் தந்தையின் பெயர் கை.முத்துக்கவுண்டர் என்றும் இனம் இந்து வேளாளர் என்றும் உள்ளது.

**22.** 02-ஆம் பிரதிவாதி சேகர் நிரூபண ஆணையுறுதி தாக்கல்செய்து முத்துக் கவுண்டருக்கும் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளுக்கும் 02-ஆம் பிரதிவாதி சேகரும் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளின் தாயார் மணியும் மட்டுமே மகனும் மகளும் ஆவர் என்றும் வாதி சிந்தாமணி முத்துக் கவுண்டருக்கும் கந்தாயம்மாளுக்கும் பிறக்கவில்லை என்றும் ஆதரவற்ற - வராக இருந்த வாதி சிந்தாமணியை முத்துக் கவுண்டர் தன் குடும்பத்திற்கு அழைத்துவந்து வளர்த்து திருமணம்செய்து கொடுத்ததாகவும் கூறியுள்ளார். முதல்விசாரணையில் அவர் சொன்ன மேற்சொன்ன சங்கதிகளுக்கு மாறான சங்கதிகள் எதையும் குறுக்குவிசாரணையில் அவர் கூறவில்லை. பிரதிவாதி தரப்பு 02-ஆம் சான்றாவணமான ஆத்தூர் வட்டாட்சியர் வழங்கிய கைலாச கவுண்டர் மகன் முத்துக் கவுண்டரின் வாரிசுச் சான்றிதழ் குறியீடுச் செய்யப் பட்டுள்ளது. அந்தச் சான்றிதழ் 20.01.2015-ஆம் தேதியன்று வழங்கப்பட் டிருக்கிறது. முத்துக் கவுண்டரின் வாரிசுகளாக மனைவி கந்தாயம்மாள், மகன் சேகர், காலஞ்சென்ற மகள் மணியின் மகள் பேபி, மகன் துரை ஆகிய நால்வரின் பெயர் மட்டுமே உள்ளது.

**23.** வழக்குத் தொடுக்கப்பட்ட சில மாதங்களிலே 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாள் இறந்துவிட்ட நிலையில் தானும்(வாதி சிந்தாமணி) 02-ஆம் பிரதிவாதி சேகரும் உடன்பிறந்த சகோதர சகோதரி என்று நிரூபிக்க

இருவரின் இரத்த மாதிரிகளையும் அறிவியல் முறையில் பகுப்பாய்வு செய்து அறிக்கை பெற ஆணையிடக் கோரி வாதி சிந்தாமணி வழக்கிடை விண்ணப்ப எண் 23/2019-ஐ தாக்கல்செய்திருக்கிறார். வாதி சிந்தாமணி முத்துக் கவுண்டரின் உயிரணு தந்தைதான் என்பதை வேறு முறையில்தான் வாதி சிந்தாமணி நிரூபிக்க வேண்டும் என்றும் மரபணு சோதனைக்கு 02-ஆம் பிரதிவாதி சேகரை கட்டாயப்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டு இந் நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடிச் செய்திருக்கிறது.

**24.** 02-ஆம் பிரதிவாதி சேகர் 07.02.2023-ம் தேதியன்று வாதி தரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது வாதி என்னுடன் பிறந்தவர் இல்லை என்று நிரூபிக்க என்னை மரபணு சோதனைக்கு (DNA) உட்படுத்திக்கொள்ள நான் தயார் என்று சொல்லியிருக்கிறார். அதன் பிறகு வாதி சிந்தாமணி தன் மரபணுவையும் 02-ஆம் பிரதிவாதி சேகரின் மரபணுவையும் அறிவியல் முறையில் ஒப்பிட்டு அறிக்கைப் பெற ஆணையிடக் கோரி வழக்கிடை விண்ணப்ப எண் 3/23 என்ற மனுவை மீண்டும் தாக்கல்செய்திருக்கிறார். அந்த மனுவை 27.06.2023-ஆம் தேதியன்று அனுமதித்த இந் நீதிமன்றம் மரபணு சோதனைக்கு இரத்த மாதிரிகளை வழங்குமாறு இருவருக்கும் ஆணையிட்டிருக்கிறது. அந்த ஆணையை எதிர்த்து 02-ஆம் பிரதிவாதி சேகர் மாண்பமை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த சீராய்வு மனுவை (CRP No.386/2023 & CMP No.23685/2023) 10.06.2025-ஆம் தேதியன்று உயர் நீதிமன்றம் தள்ளுபடிச் செய்தது. மரபணு சோதனைக்குத் தன்னை உட்படுத்திக்கொள்வதும் உட்படுத்திக்கொள்ளாததும் 02-ஆம் பிரதிவாதி சேகரின் விருப்பம் என்றும் அச் சோதனைக்கு தன்னை உட்படுத்திக்

கொள்ள அவர் மறுத்தால் அவரது செயல் அவருக்கு எதிராக அனுமானத்தை தோற்றுவிக்கும் என்றும் மரபணு சோதனைக்கு 02-ஆம் பிரதிவாதி சேகர் மறுத்தால் அவரது நடவடிக்கையை விசாரணை நீதிமன்றம் கவனத்தில்-கொள்ள வேண்டும் என்றும் மாண்பமை உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்-துள்ளது.

**25.** மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணைபடி மரபணு சோதனைக்கு உட்பட 02-ஆம் பிரதிவாதி சேகர் இசைகின்றாரா? இல்லையா? என்று தெரிவிக்குமாறு இந் நீதிமன்றம் ஆணையிட்டிருந்தது. 01.06.2026 ஆம் தேதியன்று 02-ஆம் பிரதிவாதி சேகர் அவரது வழக்குரைஞருடன் தோன்றி மரபணு சோதனைக்கு உட்பட தனக்கு விருப்பம் இல்லை என்று தெரிவித்ததுடன் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற ஆணைக்கு எதிராக மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவதாக தெரிவித்தார். (அவ்வாறு தாக்கல்செய்யப்பட்ட மேல்முறையீடு மாண்பமை உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடிச் செய்யப்பட்டுவிட்டதாக தெரிகிறது)

**26.** ஆத்தூர் வருவாய் வட்டாட்சியர் வழங்கிய முத்துக் கவுண்டரின் வாரிசுச் சான்றிதழில் வாதி சிந்தாமணியின் பெயர் இல்லை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதுச் சம்மந்தமாக வாதி சிந்தாமணி அவரது எதிர்ப்பைத் தெரிவித்து சேலம் மாவட்ட ஆட்சியருக்கு 12.02.2018-ஆம் தேதியன்று கடிதம்**(வா.சா.ஆ-05)** எழுதியுள்ளார். இறந்துபோன இந்து ஒருவருக்கு யார்யார் முதல் வகுப்பு வாரிசுகள், 02-ஆம் வகுப்பு வாரிசுகள் என்று வாரிசுகள் குறித்து இறுதி முடிவுசெய்யும் அதிகாரம் உரிமையியல் நீதிமன்றங்களுக்கே உண்டு என்பதும் வருவாய்த் துறையினர் வழங்கும்

வாரிசுச் சான்றிதழ் இறுதியானதல்ல; அவை உரிமையியல் நீதிமன்றங்களை கட்டுப்படுத்தாது என்பதும் நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்புச் சட்டநெறி ஆகும். ஆகையால், முத்துக் கவுண்டரின் வாரிசுச் சான்றிதழில் வாதி சிந்தாமணி பெயர் இல்லை என்ற ஒரு காரணத்தினாலே வாதி சிந்தாமணி முத்துக் கவுண்டரின் உயிரணு தந்தை இல்லை என்று முடிவுசெய்ய முடியாது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

27. வாதி சிந்தாமணியின் பள்ளிச் சான்றிதழை**(வா.சா.ஆ-04)** தவிர்த்து வாதி சிந்தாமணியின் உயிரணு தந்தை முத்துக் கவுண்டர் என்று காட்டும் ஆவண சான்று எதுவும் இந்த வழக்கில் தாக்கல்செய்யப்படவில்லை. அந்த ஒரு சான்றிதழை மட்டும் வைத்து வாதி சிந்தாமணியின் உயிரணு தந்தை முத்துக் கவுண்டர் என்று முடிவுசெய்ய முடியுமா? அல்லது அந்தச் சான்று மற்றச் சான்றுகளுடன் சேர்த்து அவ்வாறு நிரூபிக்கிறதா? என்று பார்க்க வேண்டும்.

28. பிரதிவாதி தரப்பு 04-ஆம் சான்றாவணமாக கந்தாயம்மாள் 18.05.2017-ஆம் தேதியன்று 02-ஆம் பிரதிவாதி சேகருக்கு நிறைவேற்றிக் கொடுத்த அறுதியாவணத்தின் சான்றிட்ட நகல் உள்ளது. அதில் தனக்கும் (கந்தாயம்மாள்) முத்துக் கவுண்டருக்கும் 02-ஆம் பிரதிவாதி சேகரையும் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளின் தாயார் மணியையும் தவிர வேறு பிள்ளைகள் இல்லை என்று கந்தாயம்மாள் கூறுவதுபோன்று வாசகம் உள்ளது. வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணமான 03-ஆம் பிரதிவாதி துரை 02-ஆம் பிரதிவாதி சேகருக்கு நிறைவேற்றிக் கொடுத்த விற்பனை பத்திரத்தில் 02-ஆம் பிரதிவாதி சேகரையும் தன் தாயார் மணியையும் தவிர

வேறு யாரும் முத்துக் கவுண்டருக்கும் கந்தாயம்மாளுக்கும் வாரிசுகள் இல்லை என்று துரை சொல்வதுபோன்று வாசகம் உள்ளது.

**29.** வாதி தரப்பு 02-ஆம் சான்றாவணமாக இந்த வழக்கு தொடுக்கப் படுவதற்குமுன் வாதி சிந்தாமணி அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு உள்ளது. அந்த அறிவிப்பு 27.02.2017-ஆம் தேதியன்று அனுப்பபட்டிருக் - கிறது. அதன் பிறகே பிரதிவாதி தரப்பு 03-ஆம் சான்றாவணமும் 04-ஆம் சான்றாவணமும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்த வழக்குத் தொடுக்கப் பட்ட பிறகு 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாள் இறந்திருக்கிறார். பிரதிவாதி தரப்பு 04-ஆம் சான்றாவணம் வாதி சிந்தாமணி முத்துக்கவுண்டரின் மகளா என்ற பிரச்சனை ஏற்பட்டபிறகு நிறைவேற்றப்பட்ட ஆவணம் என்பதால் முத்துக் கவுண்டருக்கும் கந்தாயம்மாளுக்கும் பிறந்த நபர்கள் குறித்து அந்த ஆவணத்தில் கந்தாயம்மாளால் சொல்லப்பட்டதாக காணப்படும் கருத்து இந்திய சாட்சியச் சட்டத்தின் 32(5)-ஆம் பிரிவின்படி ஏற்புடையதாகவும் தொடர்புடையதாகவும் இல்லை. ஆகையால், வாதி சிந்தாமணி தனது மகள் இல்லை என்று 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளே கூறிவிட்டார் என்று 02-ஆம் பிரதிவாதி தரப்பில் முன்வைத்த எதிர்வாதம் ஏற்புடையதாக இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**30.** இவ்வழக்குத் தொடுக்கப்படும்முன் வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு 02-ஆம் பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பில்**(வா.சா.ஆ-03)** வாதி சிந்தாமணி முத்துக்கவுண்டரின் மகள் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ளது. அந்த பதில் அறிவிப்பிலோ 02-ஆம் பிரதிவாதி தாக்கல்செய்த எதிர்வழக்குரையிலோ முதல்விசாரணை ஆணையுறுதியிலோ வாதி சிந்தாமணியின் பெற்றோர்

வேறு யார் என்று திட்டவட்டமாக எதுவும் இல்லை. வாதி சிந்தாமணி ஆதரவற்றவராக எந்த இடத்தில் இருந்தார்? எந்த இடத்திலிருந்து வாதி சிந்தாமணியை முத்துக்கவுண்டர் அழைத்து வந்தார்? என்பதுபோன்ற எந்த விவரமும் சொல்லப்படவில்லை. வாதியின் வயது 02-ஆம் பிரதிவாதியின் வயது ஆகியவற்றை கவனத்தில் கொள்ளும்போது 02-ஆம் பிரதிவாதி மூத்தவர் என்பது தெரிகிறது. வாதி சிந்தாமணிக்கு எத்தனை வயது இருந்த -போது முத்துக் கவுண்டர் அழைத்து வந்தார் என்று 02-ஆம் பிரதிவாதி குறிப்பாக எதையும் சொல்லவில்லை. 02-ஆம் பிரதிவாதி சேகரின் வயதை கவனத்தில் வைத்துப் பார்க்கும்போது வாதி சிந்தாமணி எந்த வயதில் கொண்டுவரப்பட்டிருந்தாலும் அந்தச் சமயத்தில் 02-ஆம் பிரதிவாதி சேகர் சுமார் 6 வயது உடையவராக இருந்திருப்பார் என்று தெரிகிறது. அந்த சமயத்தில் மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. மேற்சொன்ன விவரங்கள் எதையும் கூறாமல் வெறுமனே வாதி சிந்தாமணி முத்துக் கவுண்டரின் மகள் இல்லை என்று 02-ஆம் பிரதிவாதி மறுப்பது ஏற்புடையதாக இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

31. ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 02-ஆம் பிரதிவாதி வாதியுடன் மரபணு சோதனைக்கு உட்பட மறுத்ததை இந்திய சாட்சியச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் அவருக்கு எதிரான அனுமானமாகக் கொள்ள முடியுமா? என்று பார்க்க வேண்டும். மரபணு சோதனை கோரி வாதி சிந்தாமணி தாக்கல் செய்த முதல்மனு தள்ளுபடிச் செய்யப்பட்ட நிலையில் அதே நிவாரணம் கோரி மீண்டும் தாக்கல்செய்யப்பட்ட மற்றொரு மனுவை இந் நீதிமன்றம்

அனுமதித்தது தவறு என்றும் அதன் முடிவை எதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட சீராய்வில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஆணைப்படி 02-ஆம் பிரதிவாதிக்கு எதிராக அனுமானம் கொள்ளக்கூடாது என்றும் 02 ஆம் பிரதிவாதி தரப்பில் வாதிட்டனர். இந்த எதிர்வாதத்தை 02-ஆம் பிரதிவாதி சீராய்வு மனுவில் முன்வைத்திருக்கிறார். சீராய்வு மனுவில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையில் முதல்மனு தள்ளுபடிச் செய்யப்பட்டதால் 02-ஆம் மனு முன்தீர்ப்புத்தடை என்ற கோட்பாட்டால் பாதிக்கப்படவில்லை என்றும் 02-ஆம் மனுவை இந் நீதிமன்றம் அனுமதித்தது சரி என்றும் முடிவுசெய்திருக்கிறது. சீராய்வு மனுவை எதிர்த்து 02-ஆம் பிரதிவாதி மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மேல்முறையீடும் தள்ளுபடிச் செய்யப்பட்டிருக்கிறது. இந் நிலையில் 02-ஆம் பிரதிவாதி சேகர் முன்வைத்த மேற்சொன்ன எதிர்வாதம் ஏற்புடையதாக இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

32. வழக்கின் தரப்பினர் அவரவர் தரப்பு வாதத்தை அல்லது எதிர்வாதத்தை நிரூபிக்க மிகச்சிறந்த சான்றை முன்னிட வேண்டும் என்பது பொது விதி. வாதி சிந்தாமணியும் 02-ஆம் பிரதிவாதி சேகரும் ஒரே பெற்றோருக்கு பிறந்த உடன்பிறந்த சகோதர சகோதரியா என்பதைக் காட்ட வாதி தரப்பில் தாக்கல்செய்யப்பட்டப் பள்ளிச் சான்றிதழைவிட மரபணு சோதனை அறிக்கை பெறுவது மிகச்சிறந்த சான்றாக இருக்கும். அவ்வாறான நிலையில் அச் சோதனை கோரி தாக்கல்செய்யப்பட்ட 02-ஆம் மனுவை இந் நீதிமன்றம் அனுமதித்ததில் தவறில்லை. 02-ஆம் பிரதிவாதி சேகர், வாதி சிந்தாமணியுடன் மரபணு சோதனைக்கு உட்பட மறுத்தச் செயல் அவ்வாறு

உட்படுத்திக்கொண்டால் வாதி தன்னுடன் பிறந்த சகோதரி அதாவது முத்துக் கவுண்டருக்கும் கந்தாயம்மாளாளுக்கும் பிறந்த உயிரணு மகள் என்று நிரூபணம் ஆகிவிடும் என்பதால்தான் அவர் அதற்கு மறுத்தார் என்று அனுமானிப்பதற்கு இடமளிக்கிறது. அந்த அனுமானம் வாதியின் பள்ளிச் சான்றிதழில் வாதியின் தகப்பனார் பெயர் கை.முத்துகவுண்டர் என்று உள்ளதை உறுதியூட்டுகிறது. வாதியின் பள்ளிச் சான்றிதழ் முறையான உடைமையிலிருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் அதை இந் நீதிமன்றம் ஏற்கிறது.

33. வாதி தரப்பு 04-ஆம் சான்றாவணமான வாதியின் பள்ளிச் சான்றிதழும் வாதியுடன் மரபணு சோதனைக்கு உட்பட மறுத்த 02-ஆம் பிரதிவாதி சேகரின் செயலால் அவருக்கு எதிராக எழுந்த அனுமானமும் ஒன்றையொன்று உறுதியூட்டி வாதி சிந்தாமணி வழக்குச் சொத்தில் உரிமையாளராக இருந்த முத்துக்கவுண்டருக்கும் அவருடைய மனைவி 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாளுக்கும் பிறந்த உயிரணு மகள் என்பதை நிரூபிக்கின்றன என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**01–ஆம் விவாதக்கூறுமீதான விவாதமும்தீர்முடிவும்**

34. முத்துக் கவுண்டர் மூலமாகத்தான் வாதி வழக்குச் சொத்தில் பாகப்பிரிவினை கோருகிறார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. வாதி சிந்தாமணி முத்துக்கவுண்டரின் உயிரணு மகள்தான் என்று 02-ஆம் எழுவினாவிலே முடிவுசெய்யப்பட்டுள்ளது. முத்துக் கவுண்டர் 12.11.2014 ஆம் தேதியன்று இறந்துவிட்டார் என்ற சங்கதியை இரு தரப்பினரும் ஒப்புக்கொள்கின்றனர். மேலும் அவரது சொத்துக்களை அதாவது வழக்குச்

சொத்துக்களைப் பொறுத்து விருப்பாவணமோ வேறு ஆவணமோ எழுதி வைக்காமல் இறந்தார் என்ற சங்கதியை இரு தரப்பினரும் ஒப்புக்கொள்கின்றனர். முத்துக் கவுண்டர் இறந்த நாளில் அவரது மனைவி 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாள், மகன் 02-ஆம் பிரதிவாதி சேகர், மகள் வாதி சிந்தாமணி, முன்னதாக இறந்துபோன மகள் மணியின் மகன் 03-ஆம் பிரதிவாதி துரை மகள் 04-ஆம் பிரதிவாதி பேபி ஆகியோர் உயிரோடு இருந்துள்ளனர்.வாதி சிந்தாமணி, 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாள், 2 ஆம் பிரதிவாதி சேகர் ஆகிய மூவரும் தங்கள் சொந்தத் தகுதியில் சம உரிமை கொண்டுள்ளனர். 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகள் தங்களின் தாயார் மணி மூலம் உரிமை கொண்டுள்ளனர்.

35. வழக்குச் சொத்துக்கள் முத்துக்கவுண்டரின் தனிப்பட்டச் சொத்துக் - களாக இருந்ததால் வாதி, 01-ஆம், 02-ஆம் பிரதிவாதி ஆகிய மூவருக்கும் தலைக்கு ¼ பங்கும் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளுக்கு சேர்ந்து ¼ பங்கும் உரிமை ஏற்பட்டிருக்கும். வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் பூர்வீகச் சொத்தின் தன்மைகொண்டதாக இருக்குமானால் வாதிக்கு 5/16 பங்கும் 02-ஆம் பிரதிவாதிக்கு 5/16 பங்கும் 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகளுக்கு சேர்ந்து 5/16 பங்கும் 01-ஆம் பிரதிவாதிக்கு 1/16 பங்கும் உரிமையாகி இருக்கும்.

36. வாதி வழக்குரையில் வழக்குச் சொத்துக்கள் மூதாதையர் சொத்து என்று குறிப்பிட்டுக் கூறவில்லை. வழக்குச் சொத்துக்கள் முத்துக் கவுண்டருக்கு 1989-ஆம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினைபடியும் 1998 ஆம் ஆண்டு ஏற்பட்டக் கிரயத்தின்படியும் சொந்தம் என்றே சொல்லி

யுள்ளார். வழக்குச் சொத்துக்களில் எந்தச் சொத்து 1989-ஆம் ஆண்டு பாகப் பிரிவினைக்கு உட்பட்டது என்றும் எந்தச் சொத்து 1998-ஆம் ஆண்டு கிரயத்திற்கு உட்பட்டது என்றும் வாதி குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மேற்சொன்ன இரு பத்திரங்களின் சான்றிட்ட நகலையோ அசலையோ இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை.

37. வழக்குச் சொத்துக்கள் யாவும் பூர்வீகச் சொத்தின் தன்மை கொண்டன என்று காட்டக்கூடிய சாட்டுரைகளையும் விவரங்களையும் விளக்கங்களையும் சொல்லாமலும் சான்றுகளை தாக்கல்செய்யாமலும் பூர்வீகச் சொத்துபோன்று கணக்கிட்டு 5/16 பங்கு தனக்கு உரிமையானது என்று வாதி கோரியுள்ளது ஏற்புடையதாக இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

38. வழக்குச் சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் என்று குறிப்பாக சொல்லப்படாத நிலையிலும் வழக்குச் சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் என்று உரிய சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படா நிலையிலும் பாகப்பிரிவினை படியும் கிரயத்தின்படியும் முத்துக் கவுண்டருக்கு வழக்குச் சொத்துக்கள் சொந்தமானது என்று வழக்குரையில் சொல்லப்பட்டிருந்தாலும் எந்தச் சொத்துப் பாகப்பிரிவினையில் கிடைத்தது எந்தச் சொத்து கிரயம் வாங்கப் பட்டது என்று குறிப்பாக சொல்லப்படா நிலையிலும் வழக்குச் சொத்துக்கள் யாவும் முத்துக் கவுண்டரின் தனிபட்டச் சொத்துக்கள் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது. பாகப்பிரிவினை மூலம் இந்து ஒருவருக்கு சொத்துக் கிடைத்தது என்ற ஒரு காரணத்தாலே அச் சொத்துக்களை பூர்வீகச் சொத்துக்கள் என்று அனுமானிக்க முடியாது. ஆகையால், வழக்குச்

சொத்தில் வாதி இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் 08-ஆம் பிரிவின்படி ¼ பங்கிற்கு மட்டுமே பாகப்பிரிவினை பெற உரிமையுடையவர் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

39. இந்த வழக்கு நிலுவையில் இருந்துவந்த நிலையில் 01-ஆம் பிரதிவாதி கந்தாயம்மாள் இறந்துள்ளார். கந்தாயம்மாள் உயிரோடு இருந்த -போதே 18.05.2017-ஆம் தேதியன்று வழக்குச் சொத்தில் அவருக்கு உள்ள பங்கைப் பொறுத்து 02-ஆம் பிரதிவாதியின் நலச்சார்பாக அறுதியாவணம் எழுதிவைத்துள்ளார். அவர் 1/3 பங்கிற்கு அறுதியாவணம் எழுதினாலும் அவருக்கு சொந்தமான ¼ பங்கைப் பொறுத்து அந்த அறுதியாவணம் செல்லத்தக்கதே. அந்த அறுதியாவணத்தை வாதி இந்த வழக்கில் எதிர்க்க-வில்லை. இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது 01-ஆம் பிரதிவாதி இறந்தாலும் அதுச் சம்மந்தமாக பங்கில் மாற்றம் கேட்டு வழக்குரையை திருத்தவும் இல்லை. ஆகையால், வாதி வழக்குச் சொத்தில் ¼ பங்கிற்கு மட்டும் பாகப்பிரிவினை பெற உரிமையுடையவர் என்றும் 01-ஆம் பிரதிவாதியின் ¼ பங்கில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## 03–ஆம் விவாதக்கூறுமீதான விவாதமும் தீர்முடிவும்

40. வாதி 5/16 பங்கிற்கு பாகப்பிரிவினை கோரியுள்ளார். வாதி ¼ பங்கிற்கு மட்டுமே பாகப்பிரிவினை பெற உரிமையுடையவர் என்று 01-ஆம் எழுவினாவிலே முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஆகையால், வாதிக்கு வழக்குச் சொத்துக்களில் ¼ பங்கிற்கு மட்டும் பாகப்பிரிவினை வழங்கி

ஆணையிடுவதே உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது. தரப்பினருக்கிடையயோன உறவுமுறையை கருத்தில் கொண்டு அவரவர் செலவுத்தொகையை அவரவர் ஏற்றுக்கொள்வதே உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## இறுதிமுடிவு

41. இறுதியாக, இந்த வழக்கு பங்குவிகித மாற்றத்துடன் அனுமதிக்கப் படுகிறது. வழக்குச் சொத்தில் ¼ பங்கிற்கு பாகப்பிரிவினை பெற வாதி உரிமையுடையவர் என்று இந் நீதிமன்றம் விளம்புகிறது. வாதியின் ¼ பங்கை தீர்ப்பாணைப் பெற்ற நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் பிரித்துத் தனித்தச் சுவாதீனத்தை அவர் வசம் ஒப்படைக்க பிரதிவாதிகள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். வழக்குச் சொத்தில் ¼ பங்கைப் பிரித்துத் தனித்தச் சுவாதீனத்தை பெறுவதற்கு இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்க இந் நீதிமன்றத்தை இயல்விக்க நடவடிக்கை எடுக்க வாதிக்கு உரிமை அளிக்கப்படுகிறது. அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.06.30 18:58:15 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

## வாதி தரப்புச் சான்றாளர்கள்

**வா.சா–01** – **சிந்தாமணி (வாதி)**

**வா.சா–02** – **P. தங்கவேல்**

## வாதி தரப்புச் சான்றாவணங்கள்

**வா.சா.ஆ–01** – *10.03.2017–ஆம் தேதியிட்ட விற்பனை ஆவணம் – சா.நகல்*

**வா.சா.ஆ–02** – *வழக்குரைஞர் அறிவிப்பு – அலுவலக நகல்*

**வா.சா.ஆ–03** – *பதில் அறிவிப்பு*

**வா.சா.ஆ–04** – *வாதிக்கு சாத்தப்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் வழங்கிய பள்ளிச் சான்று – அசல்*

**வா.சா.ஆ–05** – *வாதி சேலம் மாவட்ட ஆட்சி தலைவரிடம் கொடுத்த மனுவின் உண்மை நகல்*

## பிரதிவாதி தரப்புச் சான்றாளர்கள்

**பி வா.சா–01** – **சேகர் (பிரதிவாதி)**

## பிரதிவாதிகள் தரப்புச் சான்றாவணங்கள்

**பி.வா.சா.ஆ–01** – *முத்துக்கவுண்டரின் இறப்புச் சான்றிதழ் –அசல்*

**.பிவா.சா.ஆ–02** – *முத்துக்கவுண்டரின் வாரிசுச் சான்றிதழ் – அசல்*

IIIrd ADJ Court, Salem

| | |
|---|---|
| **பி.வா.சா.ஆ–03** | *10.03.2017–ஆம் தேதியிட்ட விற்பனை ஆவணம்– பதிவு நகல்* |
| **பி.வா.சா.ஆ–04** | *18.05.2017–ஆம் தேதியிட்ட அறுதியாவணம்– பதிவு நகல்* |
| **பி.வா.சா.ஆ–05** | *கந்தாயம்மாளின் இறப்புச் சான்றிதழ் –அசல்* |

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.06.30 18:58:25 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

IIIrd ADJ Court, Salem